
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1109

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

148

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த மு.ப.அழகிய நம்பி அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# மு.ப.அழகிய நம்பி ; சட்டத்துறையில் இருந்து ஒரு தம்பி!


ஓவியம் : ரவி பேலட்

*1958-ஆம் ஆண்டு, அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட மாநாடு பேரறிஞர் அண்ணா பங்கேற்க நடைபெற்றது. பல மாவட்டங்களில் இருந்து, கழக முன்னோடிகள் திரண்டு வந்து மேடையின் கீழ் அமர்ந்துள்ளனர். திருநெல்வேலியில் இருந்து, ரத்தினவேல் பாண்டியன் உள்ளிட்ட பலரும் வருகை தந்திருந்தனர். மாநாட்டுத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுவதற்கு, பேரறிஞர் அண்ணா ஆட்களை மேடை ஏற்றுகிறார். இந்திய பாதுகாப்புத் தடைச்சட்டத்தை எதிர்த்து, ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து பேச வேண்டும். கீழே அமர்ந்திருந்தவர்களில் நெல்லையில் இருந்து வந்தவர்களில் ஒருவரை அழைக்கிறார் அண்ணா. 'தம்பி, அழகிய நம்பி வா' என அழைத்து மேடை ஏற்றுகிறார். அந்த அழகிய நம்பி பின்னாட்களில் நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றும் அளவுக்குத் தனது, ஆற்றலை, அரவணைப்பை வளர்த்துக்கொண்டு வலம் வந்தவர். பேரறிஞர் அண்ணா போற்றிய தம்பி. தலைவர் கலைஞருக்கு நெருக்கமான உடன்பிறப்பு.*

*நெல்லையில், முறப்பநாடு என்கிற ஊரில் பிறந்தவர். விவசாயக் குடும்ப பின்னணியில் வளர்ந்தவர். நெல்லை, பாளையங்கோட்டையில் கல்லூரி படிக்கும் காலத்தில் திராவிடர் கழகப் பற்றுகொண்டு, கழகத் தோழர்களுடன் இணைந்து இயங்கத் தொடங்கியவர். சட்டக்கல்லூரியில் மாணவராக பயிலும் காலத்தில் கழகத்தில் இணைந்து செயல்படத் தொடங்கினார். 'மும்முனைப் போராட்டம்', 'தூத்துக்குடி சதி வழக்கு', '1957 சட்ட நகல் எரிப்புப்போராட்டம்' என எல்லா களத்திலும் கழகத்தினருடன் களம் கண்டவர் அழகிய நம்பி. கழகக் கொள்கை பிரச்சார மேடைகளில் சளைக்காமல் பேசக்கூடிய ஆற்றல்மிகு பேச்சாளராகத் திகழ்ந்தவர். கட்சியின் களப்பணி வீரராக அறியப்பட்டவர்.*

### ஊர்தோறும் மேடைகள்

*நெல்லையில் புகழ்பெற்ற வழக்கறிஞராகவும், பின்னாட்களில் தமிழ்நாட்டு சட்டமன்றத்தின் சபாநாயகராகவும் செயல்பட்ட செல்லபாண்டியன் அவர்களிடம் பயிற்சி பெற்றவர். அதே காலத்தில் செல்லபாண்டியன் அவர்களுடன் இணைந்து வழக்காடிக் கொண்டிருந்தவர்தான் நெல்லை மாவட்டச் செயலாளராக இருந்த கழக முன்னோடி, பின்னாளில் உச்சநீதிமன்ற நீதிபதி ஆன இரத்தினவேல் பாண்டியன் அவர்கள். அழகிய நம்பி, இரத்தினவேல் பாண்டியன் ஆகிய இருவரும் அன்றைய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தில் கழக மேடை ஏறாத ஊர்களே இல்லை எனும் அளவுக்கு சூறாவளியாகச் சுழன்றவர்கள்.*

*அன்றைய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டம் என்பது, இன்றைய தூத்துக்குடி மாவட்டம் உள்பட 11 சட்டமன்றத் தொகுதிகள், 2 நாடாளுமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய பெரும் பகுதி. ஒவ்வோர் ஊரிலும் பொதுக்கூட்டம், பிரச்சாரம் என ரத்தினவேல் பாண்டியன் அவர்களுடன் இணைந்து இயங்கியவர். இருவரும் இணைபிரியாத தோழர்களாக இருந்தவர்கள் என்பதை கலைஞர் அறிவார். அதனால்தான், 1971-ஆம் ஆண்டில், ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் முழுமையான சட்டப்பணியாற்ற சென்றபோது, நெல்லை மாவட்டக் கழகத்தின் செயலாளராக அழகிய நம்பி அவர்களை செயல்பட வைத்தார் கலைஞர்.*

*1967-ஆம் ஆண்டில் மேலப்பாளையம் தொகுதியில் வேட்பாளராக அழகிய நம்பியை அறிவிக்க, பேரறிஞர் அண்ணா முடிவு செய்திருந்தார். அப்போது காயிதே மில்லத் அவர்களுடன் கூட்டணி ஏற்பட்டு, மேலப்பாளையம் தொகுதி இந்திய முஸ்லீம் லீக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. அந்தக் கட்சியின் வேட்பாளர் பீர் முகமது அவர்களோடு அழகிய நம்பியை சந்தித்தார் காயிதே மில்லத் அவர்கள். அண்ணாவின் வழிகாட்டுதலைச் செயல்படுத்துவதே தன் பணி என, பீர் முகமது வெற்றிக்குக் களப்பணியாற்றினார் அழகிய நம்பி.*

*1968-ஆம் ஆண்டு, தென்காசியில் நடைபெற்ற இடைத்தேர்தலுக்கு, கழக வேட்பாளர் கா.மு.கதிரவன் அவர்களுக்காகப் பிரச்சாரம் செய்ய வந்த அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞருடன் ஓய்வின்றி சுழன்றார். தலைமைக் கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்களையும் நெல்லையில் வெற்றிகரமாக நடத்துவதில் முக்கிய பங்காற்றியவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது, நெருக்கடி நிலை காலத்தில் கைது என கைதுகளுக்கு அஞ்சாதவர்.*

*நெருக்கடிநிலை காலத்தில் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை சிறையில் 7 மாதங்களும், பின்னர், வேலூர் சிறையில் 5 மாதங்களும் அடைக்கப்பட்டு இருந்தார். பாளையங்கோட்டையில் கலைஞர் அடைபட்டிருந்த அதே நாட்களில்தான் அழகிய நம்பியும் சிறைக் கொடுமைகளை அனுபவித்து வந்தார்.*

### மக்கள் பணியில் நிறைவு

*நெல்லை மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவர், மாநில தமிழ்ச் சங்கத் தலைவர் என முக்கிய பொறுப்புகளில் செயல்பட்டு கழகத்தின் பெயரை நிலை நாட்டியவர். அவர் தலைவராக இருந்த போது, பணியாளர்களின் சம்பளத்தில் இருந்து அவசர காலத்துக்கு என பிடித்தம் செய்யப்பட்ட ரிசர்வ் ஃபண்ட், பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாத நிலையில், அவற்றை அந்தத் தொழிலாளர்களுக்கே கிடைக்கச் செய்ததுடன், பிடித்தம் செய்வதை நிறுத்தியதன் மூலம் பணியாளர்களின் ஊதியம் 25 சதவிகிதம் உயர்ந்தது. இப்படி, கழகத்தின் நோக்கத்துக்கு ஏற்ப மக்கள் நலன் சார்ந்து செயல்பட்டவர்.*

*1973-ஆம் ஆண்டு இவர் கழக மாவட்டச் செயலாளராக இருந்தபோது, தந்தை பெரியார் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளை நெல்லையில் நடத்தினார் அழகிய நம்பி. ஆனால், அந்தப் பயணம்தான் தந்தை பெரியாரின் இறுதி வெளியூர் பயணமாக அமைந்தது. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்பட கழக முன்னோடிகள் பலரையும் அழைத்து வந்து, நெல்லையில் கூட்டம் நடத்தியவர்.*

*அடுத்தடுத்த தலைமுறையினர் அரசியல் களத்துக்கு வந்த பின்னர், நேரடி களப்பணிகளைக் குறைத்துக்கொண்டு சட்டப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டார். கழகத்தினர் சந்திக்கும் வழக்குகளில், அவரது வாதங்கள் கழகப் பணியாக இருந்தன என்கின்றனர் கழகத்தினர். தவிர, இளைஞர்களுக்கு அரசியல் பயிற்றுவிப்பதிலும் சட்டம் பயிற்றுவிப்பதிலும் ஆர்வம் கொண்டு இயங்கி வந்தார்.*

*ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டக் களங்கள், 1989 தேர்தல் பிரச்சாரக் களம் எனக் கழகத்தையும் கலைஞரையும் விட்டு விலகாத அழகிய நம்பி அவர்கள், வயது முதிர்வு காரணமாக 2022 ஜனவரி 21-ஆம் தேதி இயற்கையில் கலந்தார். மறைந்த அவருக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக வந்து, மரியாதை செய்தனர். 2023-ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற விழாவில் மாவட்டக் கழகத்தின் முன்னோடிகள் படத்திறப்பின்போது, ரத்தினவேல் பாண்டியன், கா.மு.கதிரவன், மு.மஸ்தான், ஆ.கருப்பையா ஆகியோர் வரிசையில் மு.ப.அழகிய நம்பி அவர்களின் படத்தையும் திறந்து வைத்து மரியாதை செய்தனர் கழகத்தினர். காலம் பல கடந்தாலும், முன்னோடிகளின் களப் பணி கழகத்தினருக்கு பாடம் என்பதற்கு அந்த நினைவேந்தல் சான்றாகும்.*

> **கழகத்தினர் சந்திக்கும் வழக்குகளில், அவரது வாதங்கள் கழகப் பணியாக இருந்தன என்கின்றனர் கழகத்தினர்.**

...துடிக்கும்

## சுயமரியாதை இயக்க நூற்றாண்டு பன்னாட்டு மாநாடு!

பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமும், ரீவேம்ப் அமைப்பும் இணைந்து, புதுடெல்லியில் 'பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு – மரபு, பாடங்கள் மற்றும் எதிர்காலப் பாதை' என்ற தலைப்பில், மார்ச் 19, 20 ஆகிய தேதிகளில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டை ஒட்டி பன்னாட்டு மாநாட்டை நடத்தவுள்ளன. இந்த மாநாட்டிற்காக சர்வதேச, இந்திய அளவிலான சமூக ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், ஆய்வு மாணவர்கள், பேராசிரியர்கள், சமூகச் செயல்பாட்டாளர்களிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்பட்டுள்ளன.

'தந்தை பெரியாரின் ஜாதி எதிர்ப்பு இயக்கம்', 'சுயமரியாதை இயக்கத்தின் வரலாற்று மரபு', 'சமூகநீதி முன்னெடுப்புகளின் வரலாற்றை ஆராய்தல்', 'சுயமரியாதை இயக்கமும் பெண்ணிய விடுதலையும்', 'நீதிக்கட்சியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும்', 'திராவிட மாடல் வளர்ச்சி', 'நவீன இந்தியாவின் அரசியலில் திராவிட இயக்கத்தின் தாக்கம்', 'திராவிட வாழ்வியல் முறை', 'கல்வி மற்றும் சமூக மேம்பாட்டில் திராவிட இயக்கத்தின் பங்கு', 'சமத்துவமான எதிர்காலத்துக்கு சுயமரியாதை இயக்கத்திடம் இருந்து, நாம் கற்கும் பாடங்கள்' ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் சமர்ப்பிக்கலாம்.

கட்டுரையின் சுருக்க வடிவத்தை, பிப்ரவரி 25–ஆம் தேதிக்குள்ளும், முழுமையான கட்டுரையை, மார்ச் 15–ஆம் தேதிக்குள்ளும் அனுப்ப வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 93443-72974, 86680-62125, 63819-62692 ஆகிய எண்களிலும், periyarsrm@gmail.com இ–மெயில் மூலமாகவும் தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்


பரிதி இளம்சுருதி



### திராவிடக் கொள்கையின் தீவிரவாதி!

2013-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் அன்றைய ஜெயலலிதா ஆட்சியில் பொய் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தேன். நிபந்தனை ஜாமின் கிடைத்து வெளியில் வந்ததும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பை அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் பெற்றுத் தந்தார். அப்போது தலைவர் கலைஞர் அவர்களுடன் இருந்த அண்ணன் டி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள், தலைவரிடம் 'பரிதி மகன் சுருதிக்கு ஜாமின் கிடைத்து விட்டது. தம்பியை தீவிரவாதி என்று நினைச்சுட்டாங்க போல, மூன்று வேளை ஒரு வருடத்திற்கு காவல் நிலையத்தில் கையெழுத்து இட வேண்டும்' எனத் தலைவரிடத்தில் கூறினார். அப்போது தலைவர் அவர்கள் 'ஆமாம், பரிதி மகன் இளம்சுருதி தீவிரவாதிதான், திராவிடக் கொள்கையின் தீவிரவாதி' என்று கூறினார். அந்த நொடி என் வாழ்வில் மறக்க முடியாதது.

– பரிதி இளம்சுருதி,
கழக அயலக அணி துணைச் செயலாளர்,
99-வது வார்டு மாமன்ற உறுப்பினர்,
எழும்பூர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### ஒரே நாளில் பல போராட்டக்களங்கள்!

1964-ஆம் ஆண்டில், இந்தித் திணிப்பை எதிர்த்து, தமிழ் காக்க - தமிழ் இனம் காக்க, கழகம் தொடங்கிய நீண்ட கால இந்தி எதிர்ப்பு அறப்போர், ஒவ்வொரு மாவட்டத்திலும் பல ஊர்களில் ஒரே நேரத்தில் நடைபெற்றது. அன்றைய தென்னாற்காடு மாவட்டத்தில், ஏப்ரல் 27-ஆம் தேதி, கடலூர், விருத்தாசலம், விழுப்புரம், திண்டிவனம், செஞ்சி, கள்ளக்குறிச்சி, சிதம்பரம், திருக்கோவிலூர் மற்றும் புதுவை என ஒரே நாளில் ஒன்பது ஊர்களில் நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131